
# பெரியார் புகழ் வாழ்க !



பெரியார் என்பது
பெயரல்ல
சூரியனின் மிகுதி !

அறிஞர் அண்ணா
அய்யா கலைஞரின்
முழுப்பகுதி !

உன் தாடி
வெண் தாடி அல்ல
மின் கம்பி என
நரிக் கூட்டம்
மிரண்டது !

கரி துண்டு
உன் கருத்தை
சுவரில் எழுதியது
அது தோட்டாக்கள்
என திரண்டு !

உன் தடி ஊனிய
சத்தம் கேட்டுதானே
இன எதிரிகள்
ஓடினார்கள் !

சட்ட எரிப்பு
போராட்டம் என்று
அறிவித்தப் பிறகுதானே
சட்டத்தை எரித்தால் தண்டனை என்ன?
என்று சட்டம் தேடினார்கள் !

உன்னை முள்ளில்
அடித்தார்கள்
அடித்தவனுக்காகவே
பேசினாய் !

ஆணிகளில்
கிழித்தார்கள்
கிழித்தவனுக்காகே
அரியணைப் போட்டாய் !

நூல்
இயக்கி
பட்டம் உயரும் என்றால்
பட்டமே வேண்டாம்
என்றாய் !

புழுக்கள் நெளிந்த
சோறு
உன் வைக்கம் சிறை சொன்னது !

கல் உடைத்த வலியை
பெல்லாரி
சிறை சொன்னது !

உன் உடல் நலம் நலிந்ததை
கோவை
சிறை சொன்னது !

இந்தி திணிப்பை
எதிர்த்தாய் நேற்று !
ஆங்கிலத்தில் உயர்ந்தோம் இன்று !

தமிழ் நாடு
தமிழருக்கே என்றாய் !
சாதி ஒழிப்பில்
சாகும் வரை
நின்றாய் !

எங்கள்
கறுப்பு சிவப்பு
வேட்டியில்
நிமிர்ந்த நடையைத் தந்த
கறுப்புச் சட்டை நீ !

பாறையை
உடைக்கும்
நாட்டு வெடி - நீ !

விசம் முறிக்கும்
மூலிகைச் செடி - நீ

உன் விரல் எங்களுக்காக
நீண்டது !
உன் குரல்
எங்களுக்காக
பேசியது !

இட ஒதுக்கீடு
உன் உயிருக்கு நிகரானது !
பெண் உரிமை
உன் உள்ளத்தில்
நிலையானது !

அய்யா கலைஞர் ஆட்சியின்
சமத்துவபுரம்
உனக்கு
பூமாலைபோட்டது !

தலைவர் ஸ்டாலின் ஆட்சி
அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக்கி
பெரியார் இதயத்தில் குத்திய முள்ளை நீக்கி
பொன் மாலை போட்டது !

ரிவோல்ட்
(ஆங்கிலம்)
குடிஅரசு
புரட்சி
விடுதலை இவை
உன்
இதழ்கள் அல்ல
போர் கருவிகள் வீசிய காகிதம் !

அய்யா கலைஞர்
தலைவர்
மு .க.ஸ்டாலின்
சேனாதிபதி உதயநிதி ஸ்டாலின்
மூன்று தலைமுறையாக
போராடும் இவர்கள்
தந்தை பெரியாரின்
ஆயுதம் !



**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க.
இலக்கிய அணி




கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியை நேற்று முன்தினம் (15.9.2026) காலை, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ”தமிழ்நாடு மண்ணுரிமைக் கட்சி பொதுச்செயலாளர் முகமது தாரிக் சையது தலைமையில் அக்கட்சியின் மாநில பொருளாளர் சாசின்பாத்திமா தாரிக், தலைமைநிலையச் செயலாளர் அரவிந்த்பாண்டியன், தென்மண்டலச் செயலாளர் குணா, துணைத் தலைவர் ராம்குமார், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் முகமது அல்ஹக்கிம், விருதுநகர் மாவட்டச் செயலாளர் முகேஷ்பாண்டியன், மதுரை மாவட்டச் செயலாளர் ராம்குமார், திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் ப்ரியதர்சன் உள்ளிட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு தமிழ்நாடு மண்ணுரிமைக் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு தமிழ்நாடு மண்ணுரிமைக் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் எனவும் தெரிவித்தனர்.

### பேறிஞர் அண்ணாவின் 118-ஆம் ஆண்டு பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி!

## அண்ணா வெறும் படம் அல்ல; என்றும் நமக்குப் பாடம்!

### திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, செப்.17 - நேற்று முன்தினம் (15.9.2026) பகுத்தறிவுப் பகலவன் திராவிடர்தம் பேராசான் தந்தை பெரியார் அவர்களின் தலைமாணாக்கரான பேரறிஞர் அண்ணா அவர்களது 118 ஆவது பிறந்த நாள் பெருவிழா! தமிழ் மான, தன்மானப் பெருவிழா!

தனது கல்விப் பருவத்தை சென்னையில் முடித்தவுடன், தந்தை பெரியார் என்ற சுயமரியாதை ஈர்ப்பு மய்யத்தால் ஈர்க்கப்பட்ட அண்ணா, தந்தை பெரியார் அவர்களின் தன்மான இயக்கத்தின் தனிப்பெரும் தளபதியாக, தந்தை பெரியாரால் பெருமைப்படுத்தப்பட்டார்!

**திராவிடத்தின் மீட்சிக் காலமாக்கி வரலாறு படைத்த 'அரசியல் அதிசயம்!'**

அண்ணா ஒரு பல்கலைக் கொள்கலன்! எழுத்து, பேச்சு, சிந்தனை, செம்மையான ஆளுமை, நாடாளுமன்றவாதி, ஓராண்டு முதலமைச்சர் பதவிக் காலம் என்ற குறுகிய தனது ஆட்சிக்காலத்தை, திராவிடத்தின் மீட்சிக் காலமாக்கி வரலாறு படைத்த 'அரசியல் அதிசயம்' ஆவார்!

பொதுவாழ்வில் அவர் தனது அறிவு ஆசானிடமிருந்து - ஈரோட்டில் 'விடுதலை' ஆசிரியராகி கற்றுக் கொண்ட பல பண்புகள் அவரை நாளும் உயர்த்தி, வரலாற்றில் எவரும் பெற முடியாத தனித்த ஓர் இடத்தில் அமர்த்தியுள்ளது!

**'என்றும் எனது தலைவர் இடம் காலியே; அதை மீண்டும் அவரை அழைத்து வந்தே நிரப்புவேன்!'**

எதிர்நீச்சல், துணிவு, எதிரிகளிடத்தில் கூட கனிவு, ஆட்சி கிடைத்தபோது பணிவு, ஆளுமையில் அவர் எந்த ஏற்றம் பெற்றாலும், அந்த ஆட்சியை தனது ஆசானுக்குக் காணிக்கை ஆக்கிய பண்பின் உச்சம். 'என்றும் எனது தலைவர் இடம் காலியே; அதை மீண்டும் அவரை அழைத்து வந்தே நிரப்புவேன்' என்ற வீர சபதத்தினை அரசியலில் நிறைவேற்றிக் காட்டிய விந்தை மனிதர் பேரறிஞர் அண்ணா என்ற பெரும் ஆளுமை!

'நான் கண்டதும், கொண்டதும் ஆன தலைவர் தந்தை பெரியாரே!' என்று கூறியது மட்டுமல்ல, அதைச் சொல்லாலும், செயலாலும் அரசு மூலம் நிரூபித்துக் காட்டிய மாவீரர் நம் அண்ணா அவர்கள்.

முதலமைச்சர் பதவி, அவரது வாழ்வின் வசந்தமல்ல; தந்தை பெரியாருடன் இருந்து பரப்புரை செய்ததே 'தம் வாழ்வின் வசந்தம்' என்று மனந்திறந்த மாமனிதர் அவர்.

**தன்மான ஆடை வழங்கிய தகைசால் வள்ளல் அண்ணா!**

தந்தை பெரியார் ஏற்படுத்திய சுயமரியாதைத் திருமணத்தை சட்டப்படி செல்லுபடியாக்கியதன்மூலம், அத்திருமணம் மூலம் பிறந்த தலைமுறைகளுக்குச் சட்டப்படி தன்மான ஆடை வழங்கிய தகைசால் வள்ளல் அண்ணா!

அறிஞர் அண்ணாவின் திராவிடர் ஆட்சிதான் மக்களின் சுயமரியாதை தொடங்கி, மாநிலங்களின் சுயமரியாதைவரை விளக்கி, அதற்காகப் போராட, அரசியல் களம் அமைத்தவர் நம் அண்ணா!

அண்ணா ஆட்சிதான், கலைஞர் மற்றும் மு.க.ஸ்டாலின் ஆட்சியாக அவ்வப்போது வளர்ந்து - வழிகாட்டியது!

காலத்தை வென்றிட்ட காவியத் தலைவர்!

எனவே, அண்ணா ஒரு காலத்தை வென்றிட்ட காவியத் தலைவர்.

என்றும் மக்கள் நெஞ்சில் இருக்கும் செந்தமிழ்ப் பெட்டகம்; அறிவுச் செம்மல்!

வாழ்க! வாழ்கவே!!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.





மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் மதுராந்தகத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் தா.மோ.அன்பரசன், க.சுந்தர். நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் இருந்தனர்.



தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.58 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொதுமக்கள் காத்திருப்போர் கூடத்தை தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், து.செல்வம், மாவட்ட அவைத்தலைவர் சி.இறைவன், தி.மு.க. மாநகர செயலாளர் சண்.ராமநாதன், மேயர் (பொ) அஞ்சுகம் பூபதி, மருத்துவக் கல்லூரி பகுதிச் செயலாளர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.